டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in




agridoctor.in | 28.7.2023 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 23 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 35 - Madurai | Online Edition

# 1.25 லட்சத்துக்கும் அதிகமான பிஎம் கிசான் சம்ரிதி மையங்களை நாட்டுக்கு அர்ப்பணிப்பு

- பி.எம்-கிசான் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.17,000 கோடியின் 14-வது தவணைத் தொகையை வெளியிட்டார்
- டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலையமைப்பில் (ஓ.என்.டி.சி) 1600 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளை ஒருங்கிணைக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்
- யூரியா கோல்டு - கந்தகம் பூசப்பட்ட யூரியா அறிமுகம்
- விவசாயிகளின் வலிகளையும் தேவைகளையும் மத்திய அரசு புரிந்து கொண்டுள்ளது

புது தில்லி, ஜூலை 27

ராஜஸ்தானின் சிகாரில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் மோடி நேற்று அடிக்கல் நாட்டி நாட்டுக்கு அர்ப்பணித்தார். 1.25 லட்சத்துக்கும் அதிகமான பிரதமரின் வேளாண் வள மையங்களை (பி.எம்.கே.எஸ்.கே) நாட்டிற்கு அர்ப்பணித்தல், கந்தகம் பூசப்பட்ட புதிய வகை யூரியா கோல்டு அறிமுகம் செய்தல், டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலைப்பின்னலில் (ஓ.என்.டி.சி) 1600 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (எஃப்.பி.ஓ) இணைத்தல், பிரதமரின் விவசாயி கௌரவிப்பு நிதியின் கீழ் 8.5 கோடி பயனாளிகளுக்கு சுமார் ரூ. 17,000 கோடி 14-வது தவணைத் தொகையை விடுவித்தல், சித்தோர்கர், தோல்பூர், சிரோஹி, சிகார், ஸ்ரீ கங்காநகர் ஆகிய இடங்களில் 5 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி வைத்தல், பரன், பண்டி, கரௌலி, ஜுன்ஜுனு, சவாய் மாதோபூர், ஜெய்சால்மர் மற்றும் டோங்க் ஆகிய இடங்களில் 7 மருத்துவக் கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், உதய்பூர், பன்ஸ்வாரா, பிரதாப்கர், துங்கர்பூர், ஜோத்பூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 6 ஏகலவ்யா மாதிரி உறைவிடப் பள்ளிகளைத் திறந்து வைத்தல், திவ்ரி, ஜோத்பூர் ஆகிய இடங்களில் கேந்திரிய

வித்யாலயாக்களைத் திறந்து வைத்தல் ஆகியவை இந்தத் திட்டங்களில் அடங்கும்.

நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வருகை தந்த பிரதமர், பிரதமரின் வேளாண் வள மையத்தின் மாதிரியைப் பார்வையிட்டார். இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் பல இடங்களிலிருந்து இன்றைய நிகழ்வில் இணைந்துள்ள கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு மரியாதை செலுத்தினார். கட்டு ஷியாம் அவர்களின் பூமி இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் வருகின்ற யாத்ரீகர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது என்று கூறினார். கொவதியின் வீர பூமியிலிருந்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்குவதற்கான வாய்ப்பைப் பெற்றதற்காக நன்றி தெரிவித்த அவர், பிரதமரின் விவசாய கௌரவிப்பு நிதியின் (பி.எம்–கிசான்) கீழ் தவணைத் தொகை கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு நேரடியாக மாற்றப்படுவதைக் குறிப்பிட்டார். நாட்டில் 1.25 லட்சத்துக்கும் அதிகமான பிரதமரின் வேளாண் வள மையங்களின் அர்ப்பணிப்பு குறித்து பேசிய பிரதமர், இது கிராம மற்றும் வட்டார அளவில் கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு நேரடியாக பயனளிக்கும் என்றார். டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலைப்பின்னலில் (ஓ.என்.டி.சி) வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளை (எஃப்.பி.ஓ) இணைப்பது பற்றியும் அவர் குறிப்பிட்டார். இது நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்வதை எளிதாக்கும் என்று அவர் கூறினார். யூரியா கோல்டு, புதிய மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஏகலவ்யா மாதிரிப் பள்ளிகள் ஆகியவை பற்றியும் அவர் எடுத்துரைத்தார். இன்றைய வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்திய மக்களுக்கும் கோடிக்கணக்கான விவசாயிகளுக்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

சிகார் மற்றும் கொவதி பிராந்திய விவசாயிகளின் முக்கியத் துவத்தை குறிப்பிட்ட பிரதமர், நிலப்பரப்பு கடினமாக இருந்த போதும் அவர்களின் கடின உழைப்புக்கு மரியாதை செலுத்தினார். விவசாயிகளின் வலிகளையும், தேவைகளையும் மத்தியில் உள்ள தற்போதைய அரசு புரிந்து கொண்டுள்ளது என்று பிரதமர் கூறினார். கடந்த 9 ஆண்டுகளில் விதை முதல் சந்தை வரை புதிய அமைப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டு

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

உள்ளன என்பதை பிரதமர் விவரித்தார். 2015-ம் ஆண்டு சூரத்கரில் மண்வள அட்டை திட்டம் தொடங்கப்பட்டதை அவர் நினைவுகூர்ந்தார். இந்தத் திட்டத்தின் மூலம், கோடிக்கணக்கான விவசாயிகள் மண்ணின் வளம் குறித்த அறிவின் அடிப் படையில் உகந்த முடிவுகளை எடுத்து வருகின்றனர். 1.25 லட்சம் பிரதமரின் வேளாண் வள மையங்கள் (பி.எம்.கே.எஸ்.கே) விவசாயிகளின் செழிப்புக்கு வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

இந்த மையங்கள் விவசாயிகளின் தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதாக இவை உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் விவசாயி களுக்கு விவசாயம் தொடர்பான பிரச்சினைகள் குறித்த மேம்பட்ட, நவீன தகவல்களை வழங்கும். மேலும் அரசின் வேளாண் திட்டங்கள் குறித்த தகவல்களையும் இந்த மையங்கள் சரியான நேரத்தில் வழங்கும். விவசாயிகள் தொடர்ந்து இந்த மையங்களுக்குச் சென்று அங்கு கிடைக்கும் தகவலை கொண்டு பயனடைய வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். இந்த ஆண்டு இறுதிக்குள் கூடுதலாக 1.75 லட்சம் பிரதமரின் வேளாண் வள மையங்கள் (பி.எம்.கே. எஸ்.கே) நிறுவப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

விவசாயிகளின் செலவினங்களைக் குறைக்கவும், அவர் களுக்குத் தேவையான நேரத்தில் அவர்களுக்கு ஆதர வளிக்கவும் தற்போதைய அரசு முழு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் கூறினார். பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதி பற்றி குறிப்பிட்ட பிரதமர், இது விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்படும் உலகின் மிகப்பெரிய திட்டம் என்று கூறினார். இன்றைய 14-வது தவணையை சேர்த்தால் இதுவரை 2 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளதாகவும், இது விவசாயிகளுக்கு பல்வேறு செலவுகளுக்கு பயனளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டில் யூரியாவின் விலை என்பது விவசாயிகளின் செலவுகளை அரசு மிச்சப்படுத்துகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்று அவர் கூறினார். உரங்களின் விலை குறித்து பேசிய பிரதமர், யூரியா விலை விவசாயிகளை பாதிப்பதற்கு அரசு அனுமதிக்காது, என்றார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

சிறுதானியங்களை ஊக்குவிப்பது, சிறுதானியங்களை ஸ்ரீ அன்னா என்று குறிப்பிடுவது போன்ற நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் பேசினார். ஸ்ரீ அன்னாவின் ஊக்குவிப்பு மூலம், அதன் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி அதிகரித்து வருகிறது என்று அவர் கூறினார்.

தமது சமீபத்திய பயணத்தின் போது வெள்ளை மாளிகையின் அதிகாரபூர்வ விருந்தில் சிறுதானியங்கள் இருந்ததை அவர் நினைவு கூர்ந்தார்.

ராஜஸ்தான் ஆளுநர் கல்ராஜ் மிஸ்ரா, மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் கொவத், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் கைலாஷ் சௌத்ரி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



# குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு பெறுவதற்கான கடைசி நாள் நீட்டிப்பு

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

திருச்சி, ஜூலை 27

குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு பெறுவதற்கான கடைசி நாள், ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்படுகிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு களுக்கான ஆணைகளை வழங்கினார்.

அப்போது பேசிய முதலமைச்சர், இந்த அரசு பொறுப்பேற்று, செயல்படுத்திய திட்டங்களினால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 2021-2022-ஆம் ஆண்டு 119 இலட்சத்து 97 ஆயிரம் மெட்ரிக் டன் அளவில் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டு ஒரு சாதனையை படைத்திருக்கிறோம். உழவர்களின் தேவை களுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் இந்த அரசு, நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி, உழவர்கள் அதிக பாசனப் பரப்பில் வேளாண் செய்ய ஏதுவாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகளை வழங்கி சாதனை படைத்துள்ளது.



அந்த சாதனை பயணத்தின் தொடர்ச்சியாக தான், மேலும் 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது இதுவரை 5 ஆயிரத்து 201 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 2 ஆயிரத்து 504 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.




இந்த ஆண்டு சிறப்பு தொகுப்பு பெறுவதற்கான இறுதி நாளை ஆகஸ்ட் 15 வரை நீட்டித்து தரவேண்டும் என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை அரசிடம் வைத்திருப்பதாக அறிந்தேன்.

அதை உடனடியாக அரசு ஏற்றுக்கொண்டு, ரூபாய் 75 கோடி மதிப்பிலான குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தை பெறுவதற்கான இறுதி நாள் ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்படும் என்று மகிழ்ச்சியான செய்தியை கூறி உரையை நிறைவு செய்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (சிறுதானியங்கள்) முன் காரீப் பருவ பயிற்சி

மதுரை, ஜூலை 27

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரம், வண்டாரி பஞ்சாயத்து அணைக்கரைப்பட்டி உட்கடை கிராமத்தில் தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (சிறுதானியங்கள்) முன் காரீப் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. கிராமத்தைச் சேர்ந்த 30 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சியை துவக்கி வைத்து பேசிய வேளாண்மை உதவி இயக்குநர் இரா.இராமசாமி, மண் பரிசோதனை முக்கியத்துவம், கோடை உழவு செய்தல், சான்று பெற்ற விதைகள் பயன் படுத்துதல், நுண்ணூட்டம் மற்றும் திரவ உயிர் உரங்கள் பயன்படுத்துதல் மற்றும் பயிர் எண்ணிக்கை பராமரிப்பு குறித்து தொழில் நுட்பங்களை விரிவாக எடுத்துக் கூறினார்.

வேளாண்மை அலுவலர் கா.மணிமேகலை, சிறுதானியங்களின் ஊட்டச்சத்து நிலை மற்றும் மகத்துவம் குறித்தும், சாகுபடி ஏன் செய்ய வேண்டும் என்பதற்க்கான விளக்கத்தையும், ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்த தொழில்நுட்ப கருத்துக்களையும் கூறினார்.

தொழில்நுட்ப உதவியாளர் தெ.கார்த்திக் இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் மற்றும் விதை நேர்த்தி செயல் விளக்கத்தையும் செய்து காண்பித்தார்.

பயிர் அறுவடைப் பரிசோதகர்கள் இ.பாண்டியராஜன், ச.சோலைராஜா இருவரும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

உதவி வேளாண்மை அலுவலர் க.ரவிச்சந்திரன், கலைஞர் திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் பற்றி எடுத்துக்கூறி நன்றியுரை ஆற்றினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சுதேசி பனை தொழில் பயிலரங்கம் மற்றும் பயிற்சி பட்டறை துவக்க விழா




கடலூர், ஜூலை 27

அண்ணாமலைப் பல்கலைக்கழக கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் சுதேசி பனை தொழில் பயிலரகங்கம் மற்றும் பயிற்சி பட்டறை துவக்க விழா தச்சக்காடு ஸ்ரீபிடாரி அம்மன் கோவில் வளாகத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்றது. மாணவ குழு பிரதிநிதி ஜெ.ஜெர்லின் ஸ்வதோ வரவேற்புரை வழங்கினார். தச்சக்காடு ஊராட்சி மன்ற தலைவர் சிவசங்கரி ராம் மகேஷ் துவக்க உரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக விவசாயிகளுக்கான வேளாண் தொழில்நுட்ப தகவல் மைய ஒருகிங்கிணைப்பாளர் முனைவர் தி. ராஜ் பிரவின் தனது தலைமை உரையில் புதிய முறையிலான சுதேசி தொழில்கள் வாயிலாக கிராமபுறங்களில் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புகள் மற்றும் தற்சார்பு வேளாண்மை உருவாக்க முடியும் என்று விளக்கி கூறினார். பின்னர் சிறப்புரை வழங்கிய குமரி நம்பி, செயலாளர், சுதேசி பனை ஆராய்ச்சி நிறுவனம் பனை மரம் சார்ந்த தொழில்கள் மற்றும் மதிப்புக் கூட்டல் முயற்சிகள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதிகளவு பொருளாதார உயர்வுகளை அடைய முடியும் என்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழக புதுமை புனைவு மற்றும் உள் வளர் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரி இரா.கார்த்திக், தனது சிறப்புரையில் பனை பயிற்சி பட்டறை வாயிலாக பயிற்சிகள் பெற்று கிராமப்புற பெண்கள் சிறந்த தொழில் முனைவர்களாக உருவாக முடியும் என்றார். இவ்விழாவில் தச்சக்காடு ஊராட்சி மன்ற துணை தலைவர் எழிலரசி, சிதம்பரம் டிஎம்பி வங்கி மேலாளர் ஜெயபிரகாஷ், முன்னோடி விவசாயி நெய்வாசல் நெடுஞ்செழியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்த பனை தொழில் பயிலரங்கின் பனை கண்காட்சி அரங்கை தச்சக்காடு முன்னோடி விவசாயி ச.ராம் மகேஷ் திறந்து வைத்தார். சுமார் 300 விவசாயிகள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், பண்ணை மகளிர் கலந்து கொண்ட இந்த பயிற்சி பட்டறையின் இறுதியில் மாணவ குழு துணை பிரதிநிதி ப. ஜனனி ஸ்ரீ நன்றி தெரிவிக்க துவக்க விழா நிறைவு பெற்றது.

# சேலம் பூ மார்க்கெட் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்கும் விலை நிலவரம் (விலை கிலோ 1க்கு)

| | | | |
|---|---|---|---|
| மல்லி | 700 | மஞ்சள் அரளி | 110 |
| முல்லை | 360 | செவ்வரளி | 140 |
| ஜாதி மல்லி | 280 | ஐ.செவ்வரளி | 120 |
| காக்கட்டான் | 700 | நந்தியாவட்டம் | 80 |
| கலர் காக்கட்டான் | 320 | சி.நந்தியாவட்டம் | 120 |
| மலைக்காக்கட்டான் | 700 | சம்மங்கி | 70 |
| அரளி | 100 | சாதா சம்பங்கி | 70 |
| வெள்ளை அரளி | 110 | | |

## தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்




# தினம் ஒரு மூலிகை

# ஓமம்




ஓமம் விதைகளுக்காக பயிர் செய்யும் ஒரு சிறு செடி இனம். இதன் விதைகள் நாட்டு மருந்து கடைகள், பல சரக்கு கடைகளில் கிடைக்கும். மருத்துவ குணத் தினை பொறுத்தமட்டில், பசி தூண்டுதல், வயிற்று வாய்வு அகற்றுதல், இசிவு அகற்றல், உடல் வெப்பம் மிகுத்தல், உமிழ்நீர் பெருக்குதல், உடலுறமாக்கல் ஆகிய குணம் உடையது. ஓமத்தை வறுத்து சம அளவு கறி உப்பு சேர்த்து பொடித்து ஒரு கிராம் அளவுக்கு நீருடன் உட்கொள்ள பசியை தூண்டும், வயிற்று வாய்வு தீரும். ஓமம், திப்பிலி, ஆடாதோட இலை, கசகசா தோல் வகைக்கு 25 கிராம் அரை லிட்டர் நீரில் இட்டு இருநூறு மில்லியாக காய்ச்சி வடித்து 15 மில்லியாக காலை, மாலை அருந்தி வர இரைப்பிருமல், நுரையீரலில் உள்ள தேங்கிய கபம் கரையும். ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் ஆகியவற்றை சம அளவு எடுத்து இளம் வருப்பாய் வறுத்து இடித்து பொடித்து அதனுடன் சமன் சர்க்கரை கலந்து அரை தேக்கரண்டி காலை, மாலை கொடுத்து வர செரியாமை, வயிற்றுப்போக்கு குணமாகும். இது ஒரு வாசனைப் பொருள். நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் சேர்ப்பது உண்டு.

தகவல் : **ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.**

முகக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக முகக் கவசம் அணிவோம்

# மாடித்தோட்டம் அமைக்க ஆசையா? எப்படி அமைப்பது?



இன்றைய தினத்தில் காய்கறிகள் விலை விண்ணை மூட்டும் நிலையில் விற்கப்படுகிறது. குறிப்பாக தக்காளி, பச்சை மிளகாய், இஞ்சி விலையை கேட்டாலே மணி பார்ஸ் கலங்குது. என்ன செய்ய. இதற்கு நகரவாசிகள் நாங்க எங்கே விளை விப்பது என்று சிந்திப்பது என் காதில் கேட்கிறது. அதற்கு ஓரே தீர்வு தான், மாடித்தோட்டம். தங்களுடைய இல்லத்தில் உள்ள மொட்டை மாடியில் அமைப்பது (TERRACE GARDEN) தான்.

## மாடித்தோட்டம் அமைப்பது எவ்வாறு?

மாடித்தோட்டம் அமைக்க குறைந்தபட்சமாக 300 சதுர அடி மொட்டை மாடியே போதுமானதாகும். மாடிப்பகுதியில் சூரிய ஒளி கிடைக்கும் இடங்கள், நீர் எளிதாக வெளியேறுவதற்கான வடிகால் வசதியுள்ள இடங்களை தேர்வு செய்ய வேண்டும். அதிக அளவு நீர் கசிவு ஏற்பட்டால் 4X4 சதுர மீட்டர் பாலித்தீன் விரிப்புகளை விரித்து அதன் மீது தொட்டிகளை வைக்கலாம்.

## பயிரிடும் காய்கறி வகைகள்?

கத்திரி, தக்காளி, வெண்டை, பச்சை மிளகாய், கீரை வகைகள், கொத்த மல்லி, முள்ளங்கி மற்றும் பூச்செடிகள்.

## தேவையான பொருட்கள்?

உங்களுடைய தேவைக்கேற்ப பாலித்தின் பைகள் வாங்கிட வேண்டும். ஒவ்வொரு பையிலும் கேக் வடிவிலான தேங்காய் நார் கழிவு 2 கிலோவுடன் தேவையான அளவு தண்ணிய ஊற்றி கட்டிகளை சேர்த்து விதையை ஊன்றும் ஊடகமாக மாறி விடும். பாலீத்தின் பையில் பக்காவாட்டில் நான்கு புறம் துளைகள் இடவேண்டும். இதன் வழியாக அதிகப்படியான நீர் வெளியேற் றப்படும். 1 கிலோ தொழுஉரம் அல்லது மண் புழு உரம் இவற்றுடன் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் பூஞ்சான கொல்லிகளை கலந்து விடவும். இவை நன்கு மக்கிய பிறகு நன்றாக கலவை பையில் ஒன்று சேர்ந்த பின் 10 நாட்களுக்கு பிறகு தான் விதையை விதைக்க வேண்டும். அப்போது தான் விதைகள் முளைப்பதற்கு ஏற்றதாக இருக்கும்.

## மாடி தோட்டத்தினால் ஏற்படும் பயன்கள்

1) நஞ்சில்லா காய்கறிகளை தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.

2) வீட்டினுள் வெப்ப நிலை அளவு 6 டிகிரி முதல் 10 டிகிரி செல்சியஸ் வரை குறையும்.

3) மனச்சோர்வு, தனிமையில் இருப்பவர்கள் மாடியில் காய்கறி பயிரிடும் போது புத்துணர்ச்சி கிடைக்கிறது.

4) இது பொழுது போக்காக கருதி வீட்டில் உள்ள பெண்கள், குழந்தைகள் 1 மணி நேரம் செலவழித்தால் 100 மடங்கு புத்துணர்ச்சியுடன் அன்றாட சமையலுக்கு தேவையான






காய்கறிகள் கிடைக்கும்.

ஆடிபட்டம் தேடி விதை, என்பதால் ஆடி 18க்கு பிறகு காய்கறி தோட்டம் அமைக்க அந்த அந்த மாவட்டத்திலுள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். மானிய விலையில் காய்கறி வளர்ப்பதற்கான பைகள் (GROW BAG) மற்றும் விதைகள் அடங்கிய பாக்கெட்கள் மாடித்தோட்டம் கிட் வடிவில் நகரவாசிகள் விவசாயிகள் உள்பட அனைவரும் வாங்கி கொள்ளலாம். கடுமையான விலைவாசியை கட்டுப்படுத்த நம்முடைய வீட்டில தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்யலாமே. தேவை யான ஆவணங்களுடன் தோட்டக்கலைத்துறையை நாடலாம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# பெருந்துறை வட்டாரத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி




ஈரோடு, ஜுலை 27

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 2023-24 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட சிங்காநல்லூர் வருவாய் கிராமத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி (SSI Sugarcane) 26.7.23 அன்று பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சி.சசிகலா தலைமையில் நடைபெற்றது.

இந்த பயிற்சிக்கு சிங்காநல்லூர் பஞ்சாயத்துதலைவர் மணி மற்றும் அட்மா திட்ட தலைவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். மேலும் ஜே.கே.கே.எம் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் மோகன், நல்ல தரமான விதைக்கரணை தேர்வு மற்றும் பயிர் சாகுபடி முறைகள் பற்றியும் பூச்சி, நோய் தாக்குதல் முறை பற்றியும் அவற்றை கட்டுப்படுத்தும் முறை பற்றியும் விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். சக்தி சர்க்கரை ஆலை கரும்பு ஆலுவலர் ரஞ்சித், பேசுகையில் ஒரு பரு கரணை நடவு செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்தும் மானிய விவரம் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும் துணை வேளாண்மை அலுவலர் அருள்மொழிவர்மன், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், திட்டங்கள் மற்றும் மானிய விபரங்களை தெளிவாக விளக்கினார். வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை சார்ந்த வேளாண்மை அலுவலர் பிருந்தா, வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டுதல் பற்றியும் e-nam பற்றி விரிவாக எடுத்து கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் தாமோதரன் உழவன் செயலி பதிவிறக்கம் செய்தல் மற்றும் இடு பொருட்கள் முன்பதிவு செய்வது பற்றி விளக்கமளித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கோபிநாத், மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தாமோதரன் மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

# ஆடிப்பட்டம் தேடி விதைத்தால் அதிக மகசூல் நிச்சயம்

விழுப்புரம், ஜூலை 27

கோடை வெப்பம் தணிந்து பருவமழை ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம் என்பதால் முன்னோர்கள் ஆடிப்பட்டம் தேடி விதை என்பார்கள். ஆடி பெருக்கு அன்று தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்வர். எனவே அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விதை அளவு, சீரான மற்றும் வேகமான முளைப்புத்திறன், சீரான பயிர் எண்ணிக்கை ஒருமித்த பூக்கும் தன்மை, சீரான முதிர்ச்சிப்பருவம், குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் 15 முதல் 20 சதவிகிதம் வரை அதிக மகசூல் ஆகிய நன்மையைப் பெறலாம்.

எனவே விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே வாங்கி பயன்படுத்த வேண்டும். சான்று பெற்ற விதைகள் அனைத்தும் விதைச்சான்று அலுவலர்களால் வயல் ஆய்வில் வயல் தரம் உறுதி செய்யப்பட்டு பின்னர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை பரிசோதனை செய்து முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறஇரகக் கலவன் பிற பயிர் விதைகள் அனுமதிக்கப்பட்ட அளவு கொண்டுள்ளதா? என்பதை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படுவதால் சான்று பெற்ற விதை களைப் பயன்படுத்தி தேவையான பயிர் எண்ணிக்கையினை பராமரிக்கலாம்.

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்ய விதைமாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக்கட்டணமாக செலுத்தி விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கவும்.

விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சிநோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்கவும் விழுப்புரம் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் சந்தோஷ்குமார் கேட்டுக் கொள்கிறார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# புதுக்கோட்டை கேவிகேயில் பிரதமரின் 14வது விவசாயிகள் கௌரவ நிதி திட்டம் துவக்க விழா ஒளிபரப்பு



புதுக்கோட்டை, ஜூலை 27 புதுக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 27.7.23 அன்று பிரதம மந்திரியின் 14வது விவசாயிகள் கௌரவ நிதிதிட்டம் துவக்க விழா ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதில் பிரதமர் நாட்டின் பெரும் திட்டங்களில் இதுவும் ஒன்று எனவும் மற்றும் நாட்டின் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் பற்றியும் காணொளி காட்சி வாயிலாக கலந்து பேசினார்.






இந்நிகழ்வில் கொத்தக்கோட்டை பஞ்சாயத்து தலைவர் சிறப்பு விருந்தினாராக கலந்து கொண்டார். இதனை தொடர்ந்து விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடலில் வருகின்ற பருவத்திற்கேற்ற நெல், பயறு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் மற்றும் அதற்கான இரகங்களும் அதன் சிறப்பியல்புகள் பற்றி முனைவர் மொ.ப.கவிதா, விரிவாக எடுத்துரைத்தார். புதிய ரகங்களை பற்றி முனைவர் ஞானசேகரன், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து முனைவர் செந்தில் விளக்கினர். பயறு வகைப் பயிர்கள், சிறுதானியங்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் மதிப்புக் கூட்டுதல் குறித்து முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா செயல் விளக்கத்துடன் செய்து காட்டி மதிப்புக் கூட்டுதலின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். இவ்விழாவில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அந்தியூர் வட்டாரத்தில் விவசாயிகளுக்கு செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி



ஈரோடு, ஜூலை 27

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டாரம், வேளாண்மை உழவர்-நலத்துறை வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் செம்மை கரும்பு சாகுபடி குறித்து உள் மாவட்ட அளவிலான உழவர் பயிற்சி கெட்டிசமுத்திரம் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் தலைமையில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில் வெங்கடேசன், வேளாண்மை துணை இயக்குநர், மாநில பூச்சி கொல்லி ஆய்வகம், ஈரோடு, விவசாயிகளுக்கு சிறுதானியங்களின் பயன்கள் குறித்து எடுத்துக் கூறினார். பயிற்சியில் விவசாயிகளுக்கு, ஒரு பருகரணை நாற்று நடுவதால் ஏற்படும் நன்மைகள், இயந்திரத்தை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் நீர் மேலாண்மை உர மேலாண்மை சொட்டுநீர் பாசனத்தின் தொழில்நுட்பங்களை முனைவர் சோபன்சக்ரவர்த்தி, குமரகுரு வேளாண்மை கல்லூரி, எடுத்துரைத்தார். கரும்பு பயிரை தாக்கும் பூச்சிகளின் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி சீனிவாசன், KVK, பூச்சியில் துறை வேளாண் விஞ்ஞானி, கோபி, விளக்கினார். மேலும் இந்த பயிற்சியில், நவனீதன், உதவி வேளாண்மை அலுவலர், கண்ணன், உதவி வேளாண்மை அலுவலர் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, சக்தி சர்க்கரை ஆலை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அரசு துறை சார்ந்த மானிய திட்டங்கள் சந்தேகங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். பயிற்சியில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழுத் தலைவர் வைத்தீஸ்வரன் கலந்து கொண்டார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விக்னேஷ் மற்றும் பூபதி, உழவன் செயலி பதிவிறக்கம் மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து விளக்கினர்.

# பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு மண்வள அட்டை படி உரமிடுதல் குறித்த பயிற்சி



விருதுநகர், ஜூலை 27

ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பில் விருதுநகர் மாவட்டத்தில் இந்த ஆண்டு முதல் நெல், மக்காசோளம், நிலக்கடலை பயிருக் கான 'டிஜிட்டல் பண்ணை பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. அந்த பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு சாகுபடிக்கான ஆயத்த பயிற்சியில் மண் மாதிரி எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு அதன் முடிவுகள் வழங்கும் நிகழ்வு 26.7.23 அன்று கிருஷ்ணன் கோவில் (வத்ராப்) மற்றும் நரிக்குடிக்கு அருகேயுள்ள மறையூர் கிராமத்திலும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட மேலாளர் ஸ்ரீகிருபா தனது உரையில் கூறுகையில். ரீலையன்ஸ் அறக்கட்டளை விவசாயி களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் விதைப்பு முதல் விற்பனை வரையிலான தொழில்நுட்ப தகவல்களை வாட்சாப் மற்றும் குறுந் தகவல் மூலமாக அவ்வப்போது வழங்கி வருவதுடன், வானிலை தகவல்கள் கால்நடை மற்றும் மீன்வளத் தகவல் வழங்கி வருகின்றது என்றும் மேலும் கட்டணமில்லாத அலைபேசி வாயிலாக 1800 419 8800 விவசாயிகள் வாரத்தில் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் விவசாயிகள் தொடர்பு கொண்டு தங்களுடைய சாகுபடி பிரச்சனைக்கான வழிமுறைகளை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொண்டார். நிகழ்வில் கலந்து கொண்ட தொழில்நுட்ப வல்லுநர் சந்திர சேகரன் பேசுகையில். விவசாயிகள் காலத்திற்கேற்ற நவீன செல வில்லாத தொழில்நுட்பங்களை கையாள வேண்டும் என்பதுடன் மண் வள அட்டை மண்ணின் ஜாதகம் என்றும் கூறினார்.

மண்வள அட்டையின் முடிவுகளின்படி தங்களுடைய மண்ணின் தரத்தையும் வளத்தையும் அறிந்து கொள்ளு வதுடன் தேவைக்கேற்ப உரமிட்டு சாகுபடி செலவு கணிசமாக குறைப்பதுடன் கூடுதலான வருவாய் கிடைப்பதற்கான வழி முறை களை தெரிவித்தார். கிருஷ்ணன் கோவில் பயிற்சியில் மேற்கு தொடர்ச்சி மலை உழவர் உற்பத்தியாளர் நிறுவன தலைவர் தமிழ் செல்வன், விநாயகம், சண்முக நாதன் மற்றும் இயக்குநர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர். மறையூர் பயிற்சியில் அக்ரி சிஆர்பி விஜயா தேவி மற்றும் அமுதா, பால்பாண்டி, சிவ இளங்கோ உள்பட நிறைய மகளிர் விவசாயிகள் கலந்து கொண்டு மண் மாதிரி ஆய்வு முடிவுகளை வாங்கி சென்றனர். இதற்கான ஏற்பாடுகளை ரீலையன்ஸ் களப்பணியர் வேம்புலு சிறப்பாக செய்திருந்தார்.

# நீடித்த நிலையான கரும்பு சாகுபடி பயிற்சி



ஈரோடு, ஜூலை 27

ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன் பாளையம் வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை, வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டம் மூலம் 2023-24 ஆம் ஆண்டுக்கான நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் கரும்பு பயிரிடுதல் குறித்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி கொங்கர்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் தூக்க நாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கார்த்திகேயன் தலைமை தாங்கி துவக்கிவைத்தார். இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் சந்தியா, கலந்து கொண்டு கலைஞர் 100 ஆண்டு, உழவன் செயலி, இ-நாம், இ-டிரேடிங், சிறுதானிய ஆண்டு, டிரோன் மூலம் தெளிப்பு செய்தல், கிரெய்ன்ஸ், இயற்கை விவசாயம் குறித்தும், வேளாண்மை-உழவர் நலத் துறையில் கரும்பு பயிருக்கு கொடுக்கப்படும் மானிய திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு தெரிவித்தார். மேலும், கோபி, மைராடா-வேளாண் அறிவியல் நிலைய மண்ணியியல் துறை விஞ்ஞானி பிரேமலதா கலந்து கொண்டு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் கரும்பு எவ்வாறு சாகுபடி செய்வது, விதை தேர்வு, மண் தயார் செய்தல், உரமிடுதல் குறித்தும், சர்க்கரைத் துறை சார்பாக சக்தி சர்க்கரை ஆலையின் முதுநிலை மேலாளர் (கரும்பு) தட்சிணாமூர்த்தி கலந்து கொண்டு கரும்பு ரகங்கள் எவ்வாறு தேர்வு செய்வது, அதில் எளிதில் நோயை தாங்கி வளரும் ரகங்கள் எவை, ஒருபரு கரணையின் முக்கியத்துவம், அறுவடை தொழில்நுட்பங்கள் குறித்தும் தெளிவாகவும், விவசாயிகளுக்கு எளிதில் புரியும்படியும் எடுத்துக்கூறினர். மேலும் அருகில் இருந்த விவசாயியின் கரும்பு வயலுக்கு சென்று வயலை காண்பித்து கரும்பு பயிரிடுவதால் விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன என்பது குறித்தும், அதை சரிபடுத்தி விவசாயிகள் எவ்வாறு லாபம் பெறலாம் என்பது குறித்தும் விளக்கினர். இந்நிகழ்ச்சியில் அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் திவாகர், சுதா, உதவி விதை அலுவலர் வெங்கிடு, முதுநிலை கரும்பு ஆய்வாளர் கோகுல், கரும்பு ஆய்வாளர்கள் பரமேஸ்வரன், முருகானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கொங்கர்பாளையம், ஏழூர் பகுதியை சார்ந்த 40 கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக் கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஞானசேகரன், மணிகண்டன் ஆகியோர் செய்திருந்தனர்.

# கோவை மாவட்டம், பொள்ளாச்சி, உழவர் சந்தை 27-7-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1.தக்காளி | 70-85 |
| 2.கத்தரி வெள்ளை-55 | கீரிகத்தரிக்காய்-35 |
| 3.வெண்டை | 30-35 |
| 4.புடலை | 20-30 |
| 5.சுரை | 18-25 |
| 6.பீர்க்கு | 30-40 |
| 7.பூசணி | 15-17 |
| 8.அவரை | 35-40 |
| 9.கொத்தவரை | 35-40 |
| 10.பாகல் | 40-55 |
| 11.பச்சை மிளகாய் | 50-60 |
| 12.முருங்கை | 30-34 |
| 13.பெரிய வெங்காயம் | 20-25 |
| 14.சின்ன வெங்காயம் | 90-100 |
| 15.கோவக்காய் | 35-40 |
| 16.தேங்காய் | 24-26 |
| 17.வாழைக்காய் | 35 |
| 18.வாழைப்பூ(1) | 15,12,10 |
| 19.வாழைத்தண்டு(1) | 10 |
| 20.வாழை இலை(5) | 15,12 |
| 21.கீரைகள்(கட்டு) | 12,10 |
| 22.கறிவேப்பிலை | 40-50 |
| 23.புதினா | 10/கட்டு |
| 24.மல்லி இலை | 50-60 |
| 25.இஞ்சி | 240-260 |
| 26.முள்ளங்கி | 20-24 |
| 27.உருளைக்கிழங்கு | 35-45 |
| 28.கேரட் | 45-55 |
| 29.சௌசௌ | 20-26 3 |
| 30.முட்டைகோஸ் | 24-28 |
| 31.பீட்ரூட் | 25-40 |
| 32.காலிபிளவர் | 30-35 |
| 33.பூண்டு-நாடு | 160-180 |
| 34.பீன்ஸ் | 80-85 |
| 35.சேனைக்கிழங்கு | 40-45 |


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளுக்கு நீடித்த நிலையான செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி



ஈரோடு, ஜூலை 27

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நீடித்த நிலையான செம்மை கரும்பு சாகுபடி தொடர்பான பயிற்சி இக்கரைநெகமம் கிராமத்தில் 27.7.23 அன்று நடைபெற்றது.

க.வேலுச்சாமி, வேளாண்மை உதவி இயக்குநர், சத்திய மங்கலம், கரும்பு பயிரில் செம்மை கரும்பு சாகுபடி மற்றும் புதிய இரகங்களை தேர்வு செய்து அதனை பயிரிட்டு அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை கூறினார்.

ப.உமாமகேஸ், வேளாண்மை அலுவலர், செம்மை கரும்பு சாகுபடி மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தார். ஏ.வாகேஸ்வரன், இணை பேராசிரியர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர், கரும்பு பயிரில் இரக தேர்வு முறைகள் மற்றும் நுட்புழு தாக்குதல், நுண்ணூட்ட பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் கூறினார்.

பண்ணாரி அம்மன் கரும்பு ஆலை உதவி பொது மேலாளர், மோகன், கரும்பு பதிவு முறைகள் குறித்து ஆலோசனை கூறினார். P.நாகராஜ், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை திட்டங்கள் குறித்து கூறினார்.

சத்தியமங்கலம் உதவி தொழில்நுட்ப மேலாளர் த.நந்தினி, உழவன் செயலி பதிவேற்றம், இ நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் அ.வீரமணி நன்றியுரை கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை சத்தியமங்கலம் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் த.நந்தினி மற்றும் அ.வீரமணி ஆகியோர் செய்திருந்தனர்.